Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 153/2022** |
| Sessions | .. | .. | } | |
| | | } | | Prosecution – **PW**–18 |
| Deposition of witness for | | } | | Defence – |
| | | } | | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | **டாக்டர். முத்தமிழரசி** |
| Husband Name | : | ராமதாஸ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2024.

(எதிரிகள் 1, 3 ஆஜர், எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.)

**முதன்மை விசாரணை**:–

நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து 31.07.2024–ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன். முன்பு நான் அதே மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது 05.03.2021 அன்று நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்று மாலை 05.45 மணியளவில் இராமநாதபுரம்

VOC நகரை சேர்ந்த பனையடியான் வயது 42 த/பெ.இருளாண்டி என்பவரை அவரது சகோதரர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் அவருடைய சகோதரரை அன்றைய தினம் முருகன் கோவில் ஆட்டோ ஸ்டாண்டின் அருகில் வைத்து தெரியாத ஆண் நபர் ஒருவரால் தெரியாத ஏதோ ஒரு ஆயுதத்தால் தாக்கியதாகவும், தாக்கிய நேரம் தெரியவில்லை என்றும் கூறினார். நோயாளியை பரிசோதித்தபோது அவர் மூச்சுத் திணறலுடன் காணப்பட்டார், அவருடைய நாடித்துடிப்பு குறைவாக காணப்பட்டது. அவருடைய இரத்த அழுத்தத்தை பதிவு செய்ய முடியவில்லை. அவரை பரிசோதித்தபோது அவருக்கு வலது காதில் இரத்தம் வளிந்து கொண்டிருந்தது. இடது முன்னந்தலையில் 5 X 3 X 2 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயமும், வலதுகால் முட்டி அருகில் 5 X 3 X 3 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயமும், இடது தொடையில் 4 X 2 X 2 செ.மீ. அளவில் ஒரு கிழிந்த காயமும் காணப்பட்டது. நான் அவருடைய காயத்திற்கு முதலுதவி சிகிச்சை செய்து ஆக்ஸிஜன் மற்றும் நரம்பு வழியாக இரத்தமும் செலுத்தினேன். ஊசி வழியாக மருத்தும் செலுத்தினேன். அவருக்கு உயிர்காக்கும் சிகிச்சை செய்து கொண்டிருக்கும்போதே அவர் மாலை 06.10 மணியளவில் இறந்துவிட்டார். அவருக்கு சிகிச்சை அளித்தது தொடர்பாக நான் விபத்து பதிவேடு பதிவு செய்தேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.10**. இறந்த பனையடியான் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்தேன். அதேநாளில் 05.03.2021 அன்று இராமநாதபுரம் அண்ணா நகரைச் சேர்ந்த அழகுமலை வயது 40 த/பெ.சின்னதுரை என்பவர் அவராக சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரியாத ஆண்நபர் ஒருவர் பின்பக்கமாக தாக்கியதாகவும், தாக்கிய ஆயுதம் எது என்று தெரியவில்லை என்றும் கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். இரத்த அழுத்தம் சாதாரணமாக இருந்தது. அவரை பரிசோதித்தபோது அவருக்கு இடது முன்னந்தலைப் பகுதியில் தலைத்தோளில் சுமார் 2 X 2 X 2 செ.மீ அளவிளான ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிசிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று நான் சான்றளித்தேன். காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ. 11**. மேற்சொன்ன பனையடியான் என்ற நபருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அருவாள்

மற்றும் சவுக்குமரக்கட்டையால் ஏற்பட வாய்ப்பு உண்டு. (சா.பொ.1 அருவாள் மற்றும் சா.பொ.2 சவுக்குமரக்கட்டையை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்.) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இறந்துபோன பனையடியானின் சடலக்கூறாய்வு அறிக்கையை நான் பார்க்கவில்லை. அவர் சிகிச்சைக்கு வந்தபோது அவர் மதுபோதையில் இருந்தாரா என்று நான் சோதிக்கவில்லை. அவருடைய வயிற்றில் 776 மில்லி கிராம் எத்தில் ஆல்கஹால் இருந்தது என்று சொன்னால் அவர் மிதமிஞ்சிய மதுபோதையில் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அந்த மிதமிஞ்சிய மதுபோதை நிலையில் இருந்தால் சிறுமூளை, பெருமூளை பாதிக்கப்பட்டு அவர் தான் என்ன செய்கிறோம் என்று தெரியாத நிலையில்தான் இருந்திருப்பார் என்று சொன்னால் சரிதான். அதிக மதுபோதையில் இருக்கிற ஒருநபர் தட்டுத்தடுமாறி கரடுமுரடான ஒரு இடத்தில் விழுந்தாலோ அல்லது மோதிக்கொண்டாலோ மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டிருந்தது மாதிரியான 3 மற்றும் 4 வது காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னால் வாய்ப்பு உண்டு. அதேபோல் அதிக மதுபோதையில் இருக்கிற ஒரு நபர் கரடுமுரடாண ஒரு இடத்தில் விழுந்தாலோ அல்லது இடித்துக் கொண்டாலோ முன்னெற்றி மற்றும் முன்தலைப்பகுதியில் மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டிருந்தது மாதிரியான 2 வது காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னால் வாய்ப்பு உண்டு, அது விழும் வேகத்தை பொறுத்தது. தள்ளாட்டம் காரணமாகவோ, ஓடும்போதோ கீழே விழுந்தால் மேற்சொன்ன 2 வது காயம் ஏற்பட வாய்ப்புண்டு என்று சொன்னால் வாய்ப்புண்டு. போலிசார் நோயாளி வரும்போதே அவருடன் சேர்ந்து வந்துவிட்டார்கள். நான் சிகிச்சை அளித்த அன்றே என்னை போலிசார் விசாரித்துவிட்டனர். அழகுமலை என்பவர் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு வந்தார் என்று விபத்து பதிவேட்டில் நான் குறிப்பிட்டு இருக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அழகுமலை தொடர்பாக நான் பதிவு செய்த அ.சா.ஆ.11 விபத்து பதிவேடு போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் தயார் செய்த பதிவேடு என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அருவாளின் வெட்டும்பகுதி மிகமிக கூர்மையான பதத்தில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான்.

இந்த அருவாளால் மிகஅழுத்தமாக விசைகொடுத்து வெட்டினால் மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டிருந்தது மாதிரியான கிழிந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சா.பொ.2 சவுக்குமரக்கட்டையால் வேகமாக அதிகவிசைகொண்டு தாக்கினால் மேற்சொன்ன நபருக்கு ஏற்பட்டிருந்தது மாதிரியான காயங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆயுதங்களால் ஒருவரை அதிக விசையோடு தாக்கினால் அதனால் ஏற்படக்கூடிய காயங்களின் அளவு தீவிரமாக இருக்கும் என்று சொன்னால் வாய்ப்பு உண்டு. போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் இந்த ஆயுதங்களால் மேற்சொன்ன நபருக்கு காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பு உண்டு என்று தவறாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் என்னிடம் இந்த ஆயுதங்களை காட்டி விசாரிக்கவில்லை.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.